இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

எம்.சி.ஒ.பி.எண்.115/2019 மசா.1

| | |
|---|---|
| பெயர். ராமன் | த/பெ. |
| கிராமம். | தொழில். |
| நாள். 02.02.2023 | வயது. |

2023 -ஆம் ஆண்டு பிப்ரவரி 02-ந் தேதிAct X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி திருமதி. C. கார்த்திகா, எம்.ஏ., பி.எல்., தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மனுதாரர். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

1. 28.05.2016 முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் மசாஆ.1.
2. 28.05.2016 விபத்து பதிவேடு உண்மை நகல் மசாஆ.2.
3. 28.05.2016 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல் மசாஆ.3.
4. 19.02.2016 ஐசிஐசிஐ லம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியின் பாலிசி உண்மை நகல் மசாஆ.4.
5. திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி நான்கு நோட்டுகள் அடங்கியது நகல்கள் மசாஆ.5.
6. டாக்டர் அன்சாரி ஆர்த்தோ ஸ்பெசாலிட்டி மருத்துவமனை மருந்து சீட்டுகள் 7 வரிசை அசல் மசாஆ.6.
7. மனுதாரரின் மருத்துவ பில்கள் அசல் மசாஆ.7.

நாகப்பட்டினம் அரசு மருத்துவ குழுமத்தால் வழங்கப்பட்ட ஊனச்சான்று அசல் நீமசாஆ.1.

மனுப்படி தீர்ப்பாக்க கோருகிறேன்.

3 எதிர்மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணை.

நான் மது அருந்திவிட்டு ரோட்டை கடக்கும்போது ஏதோ ஒரு வண்டியில் இடித்துதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தவர் பெயர் பழனி. அவர் எனது மைத்துனர் ஆவார். விபத்திற்கு காரணம் நாதான் என்றும் இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக 1ம் மனுதாரர் வாகனத்தை மோதியதாக பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவமே நடக்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**